SAOA
South Asia
Open Archives

The soul's abode

Source: *South Asia Open Archives*, 01-01-1872
Contributed by: Samuel Fisk Green 1822-1884.
Stable URL: https://www.jstor.org/stable/10.2307/saoa.crl.25894665

JSTOR is a not-for-profit service that helps scholars, researchers, and students discover, use, and build upon a wide range of content in a trusted digital archive. We use information technology and tools to increase productivity and facilitate new forms of scholarship. For more information about JSTOR, please contact support@jstor.org.

Your use of the JSTOR archive indicates your acceptance of the Terms & Conditions of Use, available at https://about.jstor.org/terms

South Asia Open Archives is collaborating with JSTOR to digitize, preserve and extend access to *South Asia Open Archives*

JSTOR

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

THE SOUL'S ABODE.

ஆத்மவாச விவரணம்.



MADRAS:

AN VERNACULAR EDUCATION SOCIETY.

Christian Knowledge Society's Press,

No. 18, Church Street, Vepery.

1872.

அணா ௧.

THEO LIB

GR489
.G74
1872

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

PITTS
THEOLOGY
LIBRARY

EMORY UNIVERSITY
ATLANTA, GEORGIA 30322

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

GR489
.G74
1872

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

ஆத்மவாச விவரணம்.

பூமியில் எனக்குப் புகலிடமாயும், என்னுடைய சீர்நிரு வாகங்களுக்குத் தகுதியாயும் ஒரு இடம் வேண்டும் என்று என் பரமபிதா கண்டு, நான் குடிகொண்டிருக்கும்படியாக ஒரு வீட்டைக் கட்டிக்கொடுத்திருக்கிருர்; அதிலேதான் நான் பிறந்தநாள்முதல் குடியிருந்துவருகிறேன்.

நான் குடியிருக்கிற வீட்டுக்கு ஆத்மவாசம் என்று பெயர்; இந்த வீடு உலகத்திலுள்ள மற்றெவ்வகை வீடுகளிலும் அதிக விநோதமும் அலங்காரமும் அருமையுமானது. இதில் அநேக அறைகள் உண்டு; அறைகள் ஒவ்வொன்றிலும் பலவகையான விலை உயர்ந்த தட்டுமுட்டுகள் நிரம்ப வுண்டு. நான் குடியிருக்கிற இந்த வீடு வேருெருவராலும் அல்ல, ஞானமும் வல்லமையுமுடைய பரம சிற்பாசாரியி ஞல் கட்டடப்பட்டது. அதிலுள்ள ஒவ்வொரு பகுதியையும் நுட்பமாய் ஆராய்ந்துபார்த்தால், அந்த வீடு நான் இருப்ப தற்கு வசதியாயும், அதிக சந்தோஷத்தை அனுபவிக்கத்தக்க தாயும் செய்திருக்கிறதென்று அறிவோம்.

இந்த வீடு குறவருடைய குடிசையைப்பார்க்கச் சிறியது. இதில் நான்மாத்திரமே வாசஞ்செய்யக்கூடும்: நான் எங்கே இருந்தாலும் எங்கேபோனுலும், அங்கங்கெல்லாம் என் வீட் டை என்னேடு சுமந்துகொண்டு போகிறேன். பகலிலும், இராவிலும், வெயிலிலும், மழையிலும், எந்த வேளைகளிலும் இது எனக்கு வசதியான இடமாய் இருக்கிறது; எனக்கல்லா

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

மல் இந்த வீடு வேறொருவருக்கும் உதவாது; நான் அதை விட்டுக்குடிபோவேனேயாகில், இது கெட்டழிந்து பாழாய்ப் போம்.

இப்போது, நான் குடிகொண்டிருக்கிற வீட்டுக்கட்டுக்கோப்பையும், அது வேய்ந்திருக்கிற மேற்கூரையையும், அதிலிருக்கிற அறைகளையும், அவைகளிலுள்ள பண்டம்பாடிகளையும், அதில் நடக்கும் தொழில்களையும் என்னலானமட்டும் தெளிவாய்ச் சொல்லிக்காட்டுவேன்.

நீ இந்தப் படத்தைப் பார்த்தவுடனே நான் இம்மட்டும் ஒப்பனையாய்ச் சொல்லிவந்தது இன்னதென்று



மனித உடம்பிலிருக்கும் எலும்புக்கோர்வையின் முன்பக்க பாவனை. கடைசிப்படத்தில் இதின் பின்பக்கம் காணுகின்றது.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

அறிந்துகொள்வாய். நான் குடியிருக்கிற வீடாவது என்னுடைய உடம்பேயாம். இது அழியாத ஆத்துமா வாசஞ்செய்வதற்கான குடிசை.

முதலாவது என் வீட்டின் கட்டுக்கோப்பை உனக்கு விரித்துக்காட்டுகிறேன். இந்தக் கட்டுக்கோப்பு பல பருமையும் வடிவமுமுள்ள எலும்புகள் சேர்த்துக்கட்டியிருக்கிறது. எலும்புகளுள் சில நீண்டு திரண்டு, உள்ளே நிணம் நிறைந்த குழாயுள்ளதாயிருக்கும்; சில கட்டைபோலக் குறுகித் தடித்திருக்கும்; சில தகடுபோலிருக்கும். இவைகள் தேன்வதையைப்போன்ற கண்ணறைகளால் நிறைந்திருக்கும்; நீள எலும்புகளின் தலைப்புகளும் இப்படித்தான் இருக்கும். இக்கண்ணறைகளில் எலும்பை வளர்ப்பதற்கு இரத்தநாடிகள் கிளைத்துப் படரும். நாடிகள் எலும்புட் புகுவதற்குத் துளைகள் பல எலும்புகளிலும் காணப்படும். எந்த எலும்பினதும் வெளிப்பகுதி வைரம்.

பச்சை எலும்பொன்றை நெருப்புத்தணலில் இட்டு நாற்றம் மாறுந்தனையும் அதைச் சுட்டால், அதிலுள்ள பசையெல்லாம் அற்றுப்போகிறபடியால் அதின் நிறை அரைவாசிவரைக்குக் குறையும்.

உடம்பிலேயுள்ள தசைகளையும், குடல்முதலிய தசையான பங்குகளையும் தாங்கும்படிக்கே மகா ஞானமுள்ள சிற்பாசாரியானவர் இவ்வகையான விட்டங்களையும் கட்டுக்கோப்பையும் செய்திருக்கிறார். எலும்புகள் இல்லாவிட்டால் என் வீடு பாரம் பொறுக்கமாட்டாமல் வளைந்து, அதின் எல்லாப் பகுதிகளும் அந்தங்கெட்டுக் கொழகொழத்து விழுந்துவிடும்.

குழந்தைப்பருவத்தில் எலும்புகள் சிறுத்தும், வைரம் குறைந்தும், ஒன்றிலே பல துண்டுகள் சேர்ந்தும் இருந்து, ஆள் முற்றமுற்ற துண்டுகள் இணைந்து, எலும்புகள் வைரங்

கொண்டு பலக்கும். இந்த வீட்டிலுள்ள சட்டம் விட்டம் உத்திரங்கள் ஒவ்வொன்றும் உயிருள்ளது. எல்லாம் ஒழுங்காயிருக்கும்போது அவைகளில் ஒரு நோவும் இல்லை. வியாதி சருவினாலோ அவைகள் உபாதிக்கு இடமாகும்; கைகாலைத் தறிக்கும்போது யாதொரு வருத்தமும் இல்லாமல் எலும்பை வாளால் அரியலாம்.

உ-ம் படம்.



வலது துடை எலும்பு.

தூண்கள்.

என் வீட்டுத் தூண்கள் என்னுடைய கால்களில் இருக்கும் எலும்புகளே. துடையில் ஒவ்வொரு எலும்பும், ஒவ்வொரு காலில் இவ்விரண்டு எலும்பும், முழங்கால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சில்லும் உண்டு. காற்படமாகிய பாதம் ஒவ்வொன்றிலும் இருபத்தாறு எலும்புகள் உண்டு. இவைகளில் எழும் குழைச்சுக்கு உரியது.

உ-ம் படத்தில் காண்கிற துடை எலும்பு என் வீட்டு உத்திரங்களுக்குள்ளே அதிகம் நீளமானது; அதின் மேல்தலைப்பில் ஓர் குமிழ் இருக்கிறது. இது பெலப்பான ஒரு விசியினால் ஒக்கலை எலும்பிலிருக்கும் குழியில் பூட்டியிருக்கிறது; மற்றத் தலைப்பு கால் எலும்புகளுடன் முழங்காலிற் பொருந்தியிருக்கிறது.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

௩-ம் படம்.



வலது காலிலுள்ள எலும்புகள் இரண்டும்.

௩-ம் படத்தில் கால் எலும்புகளைக் காணலாம். இவைகள் துடை எலும்புடன் சந்திக்கும் இடத்தில் முழங்காற்சில் இருக்கிறது; இது முதலாம் படத்தில் தெரியும்.

காற்படத்திலுள்ள இருபத்தாறு எலும்புகளும் ஒன்றோடொன்று இசிவுள்ள பலத்த விசிகளினால் கட்டுண்டிருக்கும். மிதிக்கும்போது இந்த விசிகளால் பாதம் வில்போல விசைகொண்டு சிறப்பாயும் லேசாயும் அசையும். பாதம் ஏகத்துக்கு ஒரே எலும்பாய் இருப்பதிலும், இப்படி இசிந்து கொடுக்கிற பல எலும்புகள் சேர்ந்திருப்பது அதிக பெலன். கால் ஒரே எலும்பாய் இருக்குமானால், மரத்தில் செய்த கால்போல ஆகும்.

பாதம் வில்வளைவு கொண்டது. இவ்வில்லு குதியிலும் விரல்களின் அடியிலும் பொறுத்து என்வீட்டின்முழுப்பாரத்தையும் தாங்கும்.

௪-ம் படம்.

பாதத்திலுள்ள எலும்புகள் கோத்திருக்கும் மாதிரி.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

பாதத்தோடே ஒரு பலகையை இறுக்கமாய்ச் சேர்த்துக் கட்டிக்கொண்டு நடந்தால், வில்வளைவும் இசியுந்தன்மையும் கெட்டுப்போமாதலால் மெத்த வருத்தமாயிருக்கும். இந்த இரண்டு தன்மைகளும் பொருதியிராவிட்டால் தாராளமாய் நடக்கவும், துள்ளவும், ஓடவும் முடியாது.

குதியானது காலுக்கு நேர் வரிக்குச் சற்றுப் பின்னாக விலகி வெகு இசிவுகொண்ட பொருத்தினால் பாதத்துடன் இணைந்திருக்கிறது. ஆகையினாலே நாம் நடப்பது அதிக இலகுவும், குலுங்கல் இல்லாமலும் இருக்கிறது.

௫-ம் படம்.



பெருவிரலின் நுனிதுவங்கி, குதிக்கூடாக வெட்டியிருக்கும் வலது பாதத்தின் எலும்புகளினுடைய பாவனையும், அவைகளைக் கட்டும் விசிகயினுடைய பாவனையும்.

கால்பாதங்கள் என் வீட்டுக்குத் தூண்களாயிருப்பதுமல்லாமல், அவைகள் நான் நடக்க ஓடவேண்டிய இடத்துக்கு என்னைச் சொற்படி சுமந்துகொண்டுபோகிற வாகனங்களாகவும் இருக்கின்றன.

நான் குடிகொண்டிருக்கிற வீட்டுத் தூண்களின்மேல் அகலமான குறுந்தீராந்திகள் இரண்டு போட்டிருக்கின்றன.

இவைகள் பெலமுள்ளவைகளாய் முன்னுக்கு ஒரு விசியினல் கட்டப்பட்டும், பின்னுக்கு ஆப்புப்போன்ற ஒரு எலும்பு இடையில் சொருகப்பட்டதாயும் இசைக்கப்பட்டிருக்கின்றன; இடுப்பிலேயுள்ள தீராந்திப் பலகையாகிய இந்த எலும்புகள் முதலாம் படத்திலும் கடைசிப் படத்திலும் தெரியும். இந்த மூன்று எலும்புகளும் மேலுக்கும் கீழுக்கும் அகன்ற வாயிலுள்ள ஒருவகையான கூடு உண்டாகத்தக்கதாய் இசைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஆரும் படத்தின் கீழ்ப்பகுதியில் காணலாம்.

நான் குடியிருக்கிற வீடு கீழ்வீடு, மேல்வீடு, தூபி என்னும் மூன்று பங்குகளாகும்.

கீழ் வீ டு.

இது ஒக்கலையிலிருந்து பழுவளாக்கும் இருக்கிறது. இதின் முற்சுவரும் பக்கச்சுவர்களும் மெதுவாயும் வசையக்கூடியவைகளாயும் இருக்கின்றன. பிற்சுவரோ வைரமும் உரப்புமானது. இதற்குள்ளே தீன் அறையும், அடுக்களையும், என் வீட்டுக் கஞ்சல்கழிவுகளை அகற்றுகிற மதகுமுண்டு. என் வீட்டின் முகட்டுத்தூண் இவ்வறைக்கும் இதற்கு மேலறைக்கும் ஊடாகத் தூபிவளாக்கும் ஓடியிருக்கும். இதை முள்ளந்தண்டு என்பார்கள்.

மு ள் ள ந் த ண் டு.

இது என் வீட்டிலுள்ள எந்தத் தூணிலும் பெலனுனதாயிருந்தும், எப்பக்கத்துக்கும் வசையத்தக்கதாய் இசியத்தக்க பெலனுன சில்லுகள் இடைக்கிடை போட்டு இருபத்துநாலு

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

துக்கொண்டுபோவதற்குவருவதற்குமாக என் வீட்டுக்குக் கெட்டித்தனமும் சாமார்த்தியமும் சுறுசுறுப்பும் பெலனுமுள்ள இரண்டு வேலையாட்கள் உண்டு. இவைகள் என் கைகளேயாகும். கையிலுள்ள எலும்புகள் வகையிலும் தொகையிலும் காலிலிருக்கிற எலும்புகளைப்போலவே இருக்கின்றன. ஒவ்வொரு கையிலும் முப்பது எலும்புகள் இருக்கின்றன; முழங்கைக்கு மேலே ஒன்று, அதற்குக் கீழே இரண்டு, கைக்குழைசில் எட்டு, எ-ம், அ-ம், கூ-ம், கo-ம் படங்களைப் பார்த்தால் இந்த எலும்புகளின் மாதிரியும், அவைகள் நிரைந்திருக்கும் விதமும் தெளிவாய் விளங்கும்.

என் கை எவ்வளவு இலேசாய் அசைகின்றது; அது எவ்வளவு கெதியாய் நீண்டு மடங்குகின்றது. விரல்கள் எவ்வளவு தீவிரமாய் அசைகின்றன. கை எப்படிப் பொத்திப் பிடிக்கின்றது. இது எவ்

எ-ம் படம்.



வலது புயவென்பின் முன்வளம். இதின் கீழ்த்தலைப்பு 8-ம் படத்திற் காட்டப் பட்டிருக்கிற எலும்புகளின் மேற் தலைப்போடு சந்திப்பதால் முழங்கைப்பொருத்துஉண்டாகும்.

அ-ம் படம்.



வலது முன்கையிலுள்ள எலும்புகள் இரண்டினதும் முன்வளத்தோற்றம். இவைகளின் கீழந்தம் குழைச்சு எலும்புகளோடு பொருந்துவதால், குழைச்சுப் பொருத்துண்டாகும்.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

வளவு பிரயோசனமானது. என் வீட்டைக் கட்டினவர் இவ்வளவு திறமையான உதவிக்காரனாக் கொடுத்த அளவில் எவ்

கூ-ம் படம்.



வலது குழைச்சுப்பொருத்தின் பின்வளம். இதிலுள்ள சிறந்த எட்டு எலும்புகளும் ஒவ்வொரு எழுத்தாற் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவை நிரைக்கு நந்நாலாக இரண்டு நிரையாகவிருக்கின்றன.

கO-ம் படம்.



இடது உள்ளங்கையிலும் விரல்களிலுமுள்ள எலும்புகளின் முன்வளத்தோற்றம்.

வளவு பட்சமுள்ளவர். என்னை உண்டாக்கினவருடைய நன்மைக்கும் ஞானத்துக்கும் என் கைதானே எப்போதும் அதிசயமான அடையாளமாய் இருப்பதால், அவனை நினைப்பூட்டுவதற்காகக் கன்னுனைக்கொண்டு ஒரு விக்கிரகத்தை

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

வார்ப்பிக்கத் தேவையில்லை. இதுவே அவர் நன்மையை எனக்குணர்த்தி, அவரை நேசிப்பதற்கு என்னைத் தூண்டுவ தாக.

தூ பி.

நான் இருக்கிற வீட்டின் முகட்டில் ஓர்விதமான தூபி ஒன்று இருக்கிறது; உருண்டதும், வில்வளைவுகொண்டதும், பல சன்னல்களும் கதவுமுள்ளதுமாயிருக்கிற இந்தப் பங்கு வீட்டில் அடங்கிய மற்றெந்தப் பகுதியிலும் அதிக விசித்திர மானதும், விசேஷிக்கப்படத்தக்கதுமாய் இருக்கிறது.

உலகத்திலிருக்கிற மற்ற வீடுகளை, அவைகளின் அஸ்திபா ரத்தைத் தகர்த்து இடிக்கிறதினாலே அழிந்து பாழாய்ப்போ கும்படி செய்யலாம். என் வீடோ முகட்டைப் பிடுங்கினால் உடனே விழுந்து அழிந்துபோம்.

இந்தத் தூபி கபாலம் முகம் என இரண்டு பங்குகள் உள் ளது. கபாலத்தில் எட்டு எலும்புகளும், முகத்திற் பதினா லும்சேர்ந்திருக்கும். உச்சந்தலையிலுள்ள பொருத்துகள் எழுத் துப்போலக் காணப்படுவதால் அறியாமையுள்ள சனங்கள் அதைப் பிரம எழுத்தென்றும், ஆளுடைய விதி இதாற் குறிக் கப்பட்டிருக்கிறதென்றும் நினைக்கிறார்கள். எலும்புகளைப் பிரித்துப்பார்த்தால் இது பொருத்தன்றி எழுத்தல்லவென்று இலகுவில் அறிந்துகொள்ளலாம். தூபிக்குள்ளே வில்வளை வான அறை ஒன்று நெற்றிதொடங்கிப் பிடரிவரைக்கும், ஒரு கன்னந்தொடங்கி மற்றக் கன்னம்வரைக்கும் இருக் கிறது.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

௧௧-ம் படம்.



தலையோட்டின் இடதுபக்கக்காட்சி. எலும்புகள் பொருந்தும் ஓரங்களைத் தெளிவாய்க் காட்டுவதற்கு அவைகள் விலகிநிற்கிறதாக இதில் காட்டப்பட்டிருக்கின்றன.

மனசுக்கும் உயிருக்கும் ஆசயமாகிய மூளை இவ்வறைக்குள்ளே சேமமாய் வைக்கப்பட்டு அதை முழுதும் நிரவியிருக்கின்றது. தூபியின் முகப்பிலே இரண்டு கதவும், இரண்டு சன்னலும் உண்டு. கீழேயிருக்கிற கதவின் வழியாய் வீட்டில் செலவழிகிற போசனபானங்கள் எல்லாம் உட்செல்லும். இவைகள் நலமானவைகளோ கெடுதலானவைகளோ என்று நிதானிக்கும்படி அந்த வாசலுக்குள்ளே ஒரு காவலரசன் நிற்கிறான்.

இந்தப் படத்தில் அவன் தன் முகத்தைக் கதவுக்கு வெளியே காட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கவும்.

கஉ-ம் படம்.



முகத்தின் வலப்பக்கம். இதில் வாய்திறந்து நா நீண்டிருக்கும் பாவனை. பற்கள் கடாவப்பட்டிருக்கும் விதமும் தெரிகிறது. சுவைநரம்பு நாவின் கீழ் வளத்தில் தெரிகிறது.

மேலே இருக்கிற கதவின் வழியாய் பல வாசனையான சுகந்தங்களைக் கொண்டுவருவார்கள். இந்தக் கதவண்டையிலும் ஒரு காவலாள் நாற்றங்கள் நச்சுக்காற்றுகள் வீட்டுக்குள்ளே புகவிடாதபடி நிற்பான். தூசியாவது பூச்சியாவது புகுந்தால் இக்காவலாள் எழும்பித் தும்மிச் சத்தம்வைத்து அவைகளை உடனே துரத்திவிடுவான். இந்தக்கதவு இரணைக்கதவாய்த் தொண்டையின் மேற்பகுதிவரைக்கும் எட்டும்.

வீட்டுக்காரனவன் இந்த வாசலால் வருகிறவைகளை இன்னவிதமாய் அறிவான் என்று இந்தப் படத்திலே கண்டுகொள்ளலாம். இதில் நாற்ற நரம்பு மூக்குக்குள் சளியால் எப்போதும் கசிவாக்கப்படுகிற உள்ளுறைச் சவ்வில் படர்ந்தி

ருக்கும். வாசனை கமழும் பொருள்களிலிருந்து பிறக்கும் நுண்ணிய அணுக்கள் பரமாணுவோடு உறிஞ்சப்பட்டு, இந்த

கரு-ம் படம்.



முன் தலையில் வலப்பாதி. 5 நாசி அறையின் படரும் நாற்றநரம்பு.

நரம்பின் தலைப்புகளில் பட்டு, அதினாலாகிய உணர்ச்சி நரம்பின் வழியாய் மூளைக்குச் செல்வதினாலே மோப்பம் பிடிக்கிறேன்.

புதினக் கதவுகள்.

தூபியின் வலது இடதுபக்கங்களில் சத்தம் புகுவதற்கான வாசல்கள் உண்டு. ஊரில் நடக்கும் செய்திகளும், இராகத்தின் இன்பங்களும், சிநேகிதர்களுடைய பேச்சுக்களும் இந்த வாசல்களால் உள்ளே செல்லும்; இவைகளால் எனக்குண்டாம் சந்தோஷம் மெத்த. இது இல்லாவிட்டால் நான் என் வீட்டில் தன்னந்தனியாய் இருப்பேன்.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

கச-ம் படம்.



வலது காது. இதில், a செவிமடல்; c வெளிக்காதிலிருந்து எலும்புக்குழாய்க்குட் செல்லும் கேள்வித்துவாரம்; b, h, f கேள்வி நரம்பு படரும் உட்காது; d கேள்வி நரம்பு; g பறைச்சவ்வு; i காதில்நின்று தொண்டைக்குச் செல்லுங்குழல்.

இந்தப்படம் சத்தம் உட்புகும் வாசலைக் குறிக்கின்றது. இந்த வாசல் பூச்சிபுகாதபடி வெளி நோக்கிய மயிர் நிறைந்ததாயிருக்கும். கசப்பான பாணியாகிய குறும்பி யூறி இதை எப்போதும் பசுமையாக்கி இவ்வாசலைக்காத்துக்கொள்ளும். சத்தம் எல்லாவற்றையும் எனக்குச் சேர்க்கும் வேலையாளாகிய கேள்வி நரம்பு இத்துவாரத்தின் எலும்பறையை நிரவியிருப்பதாகிய ஓர் நீரில் நீந்திக்கொண்டிருக்கும்.

என்னைச் சூழவுண்டாகும் சத்தங்கள் பறைச்சவ்விற் பட்டு அதை அசைக்கும்; இச்சவ்வில் சிற்றெலும்புக் கோவையொன்றின் ஒரு தலைப்புத் தொடுத்திருக்கும். இக்கோவையின் மற்றத் தலைப்புநரம்புக் கிடக்கும் அறையை அடைக்கிற சவ்விற் பிடித்திருக்கும்; பறைச்சவ்விற் பட்ட அதிர்ச்சி

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

எலும்புக் கோர்வைவழியாய்ச் சென்று நீரை அசைக்க, அந் நீரில் நீந்தும் நரம்பும் அசையும். இவ்வசைவு நரம்புவழியாய் மூளைக்குச் செல்வதால் கேள்வியுண்டாகும்.

சன்னல்கள்.

தூபியின் முகப்பிலே இரண்டு சன்னல்கள் உண்டு. இவைகளால் வீட்டுக்கு வேண்டிய வெளிச்சம் வருகின்றது; வெளிச்சம் அல்லாமல், இந்தச் சன்னல்கள் வழியாய்ப் பல

௧௫-ம் படம்.



முன்பின் நேருக்கு நடுவிற் பிளந்த கண்விழி. இதின் பிற்பக்கத்தில் மூளையை விழிபோடிணைப்பதாகிய பார்வை நரம்பு தெரிகிறது.

வர்ணமான சித்திரப்படங்களும் தெரிகின்றன. இவைகளிலுலே எனக்கு அதிக சந்தோஷமும் அறிவும் உண்டாகும். இவைகளுக்குக் கதவும் திரையும் போட்டிருக்கிறது. இந்தச்

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

சன்னலுக்கு முன்னே மிகவும் விழிப்பான ஓர் காவலாள் நின்று வெளிச்சம் கடுமையாய் அல்லது குறைவாய் இருப்ப தற்குத்தக்கதாகத் திரையை விரித்தும் சுருக்கியும் வருவான். இக்காவலாள் கண்ணாடிகளைத் துடைத்துச் சுத்தமாக்குவதற் குக் கதவுகளை அடிக்கடி மூடித்திறப்பான். இதுகள் சன்ன லுக்குள்ளே நுழையப்பார்த்தால் காவலாள் க்ஷணத்தில் கத வை அடைப்பான். ஏதும் புகச் சம்பவித்தால் உடனே தண் ணீரால் அதைக் கழுவித் தள்ளுவான். என் வீட்டுச் சன் னல்கள் உண்டையானவைகளாய் மூன்று சவ்வுகளாற் சுற் றப்பட்டிருக்கும். வெளிப்படலம் உரப்பும் வெண்மையுமா னது; நடுப்படலம் கருமையும் மெல்லிதுமானது; உட்பட லம் மெத்த மெல்லிதும் உருவொளியுமானது. இது நரம்பு விரிவதாலாகும். இதிலேதான் நான் பார்க்கிற பொருள்க ளின் உருவம் விழுகிறது. இந்த மூன்று படலங்களுக்கு முள்ளே தெளிவான மூன்றுவித நீர்கள் இருக்கும். முற் பகுதியில் தண்ணீர்போன்ற நீர் சில துளியிருக்கும். அதற்கு அடுக்கப்பின்னே மஞ்சாடிக்கொட்டைச் சாங்கமான கட்டி யிருக்கும். ஆகப் பின்னே கோழிமுட்டையின் வெள்ளைக் கருப்போன்ற நீர்விழியில் ஐந்தில் நாலுபங்கையும் நிரவி யிருக்கும்.

என் வீட்டுக்கு இப்படியே அநேக கதவுகளும் சன்னல்க ளும் உண்டென்று காண்கிறாய். இதில் அநேக கீல்களும் உண்டு. இவைகள் மற்ற வீடுகளைப்போலக் கதவுகள் மூடிக ளில் அல்ல, வீட்டுத்திரங்களில் பூட்டப்பட்டிருக்கும். ஆத லால் என் வீடு வாகனம்போலவும் ஆடக்கூடியதாய் அதின்

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

உத்திரங்களில் அநேகம் ஒன்றின்மேல் ஒன்று தாராளமாய் அசையும். இக்கீல்களில் எண்ணெய் எப்போதும் வலிய ஊறிக்கொண்டிருப்பதினுல் இவை எழுபது வருஷத்துக்கு வழங்கப்பட்டுவந்தாலும் தேய்கிறதில்லை.

என் வீட்டுச்சுவர்.

என் வீடு மற்ற வீடுகளைப்போல மூலைகள் பட்டங்கள் இல்லாமல் திரண்டு உருண்டதாய் இருக்கிறது. அதின் சுவர் பல படைகள் சேர்ந்திருக்கும். வீட்டுக் கட்டுக்கோப்பில் இசைந்திருக்கும் கைமரம் வரிச்சுமுதலானது ஒவ்வொன்றும் உரத்த சவ்வால் மூடிக் கட்டுண்டிருக்கிறது. இதற்கு மேலாக தசை அதிகமாய் அணைந்திருக்கிறது. தசைக்கு இடையிலும் அதற்கு மேலும் கொழுப்புப் பரந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும்மேலே முழுவதையும் போர்த்த அழுத்தமும் இசிவுமான தோல் மூடியிருக்கிறது. இது என் பிரியப்படிக்குச் சிவப்பு நிறமாயிருக்கிறது. சில வீடுகளிலோ அவரவர் மனங்கொண்டபடி வெள்ளை நிறமாவது, கறுப்பு நிறமாவது போட்டிருக்குமென்று சொல்லிக்கொள்ளுகிறுர்கள்.

என் வீட்டுச் சுமைகாரர்.

என் வீட்டுக் கூரையில் காணும் சிவப்பான சதை எல்லாம் பேசிகளாகும். பேசி என்பது தேகத்தில் எதும் பகுதியை அசைத்து இயக்குவதற்கான தசை. சில பேசிகள் தோலுக்கு அடுக்க வெளிப்படையாயிருக்கும். சில எலும்புக்கு அடுக்க ஆழத்திற் கிடக்கும்.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

௧௬-ம் படம்.



தேகத்தின் முன்வளத்திலுள்ள வெளிப்பேசிகள்.

௧எ-ம் படம்.



தேகத்தின் பின்வளத்திலுள்ள வெளிப்பேசிகள்.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

என் வீட்டிலுள்ள வெளிப்பேசிகளின் தொகையும் வகையும் கசூ-ம், கஎ-ம் படங்களில் பார்த்தால் நன்ருய் விளங்கும்.

சில பேசிகள் பரிதும் விசாலமுமாயும், சில நீண்டு திரண்டதாயும், கண்விழியை அசைப்பவைகளைப்போன்ற சில மெத்தச் சிறியதாயுமிருக்கும். கைகால்களிலுள்ள பேசிகள் உரத்த வெண்மையான தசைகளால் எலும்புகளிற் பிடித்திருக்கும்.

என் வீட்டினதும், அதின் பல பகுதிகளினதும் அசைவு ஆட்டங்கள் பேசிகளின் இயக்கத்தினுல் ஆகும். இதைத் தெளிவாய் விளக்குகிறதற்கு இந்தப் படத்தைக் காட்டுகிறேன். அதை நான் விவரிக்கும்போது நீ அதிக கவனமாய்ப் பார்க்கவேண்டியது. முன்பக்கத்திலிருக்கும் 3 என்ற பேசி சுருங்குகையில், முழங்கை முடங்கக் கைக்குண்டை. உயர்த்தும். பின்பக்கத்திலிருக்கும் 6 என்ற பேசி சுருங்குகிறபோது, முழங்கை நீளக் குண்டு தாழும்.

கஅ-ம் படம்.



கையிலும் புயத்திலுமுள்ள எலும்புகளும், புயத்தின் முன்வளத்திலும் பின்வளத்திலும் அணைந்து, தோள்மூட்டுமுதல் முழங்கைவரைக்கும் கிடக்கும் பேசிகளில் இரண்டும்.

முழங்கைக்கு மேலே கையால் இறுக்கிப் பிடித்துக்கொண்டு முழங்கையை நீட்டி முடக்கினல், பேசிகள் இயங்குகிறது கைக்குத் தெரியும். என் வீட்டுக்குரிய பேசிகளின் முழுத் தொகை ஏறக்குறைய ௬௦0. அவைகள் எல்லாம் குடியிருக்கிறவனுடைய சொல்வழிப்படி இயங்குவதற்கு அசீராய் இருக்கின்றன.

என் வீட்டின் வெளிச்சுவர்.

இதற்குத் தோல் என்று பெயர். தோல் இரண்டு படையாயிருக்கும். இவைகளில் வெளிப்படை உட்படையிலிருந்து எப்போதும் உண்டாக்கிக்கொண்டிருக்கும். நகமும் மயிரும் இந்த வெளித்தோலும் ஒரேவகைப் பதார்த்தமாகும். இவை எப்போதும் தேய்ந்து வளர்ந்துகொண்டிருக்கும். உள்ளங்கால் உள்ளங்கைகளில் வெளித்தோல் மெத்தத் தடிப்பானது. அப்படி இராவிட்டால் சொற்பவேலையால் கைகள் கொப்புளித்துப் புண்ணுகும். உள்தோல் மெத்த இசிவும், தேகத்தின் முற்பக்கத்தைப்பார்க்க பிற்பக்கத்திற் தடிப்புமானது. இதில் சிறுசிறு பைகள் கனக்கவுண்டு. இவைகளிற் சிலதிலிருந்து வீட்டைக் குளிர்ச்சிப்படுத்துவதற்கு வேர்வையும், சிலதிலிருந்து தோலே மெதுவாக்கி மேனியை வறளாமற் பண்ணுவதற்கு நிணமும் கசிந்துகொண்டிருக்கும். இதில் எண்ணிறந்த நரம்புக்கூந்தல் பரந்திருந்து, ஓர் ஈதானும் இதில் விழுந்தால் சிறிய இக்காவலாளிகளில் ஒரு ஆள் வீட்டுக்காரனுக்கு உடனே அறிவிக்கும்.

கக-ம் படத்தில் தோலின் ஒரு சிறுத்துண்டின் விளிம்பு பூதக்கண்ணுடியில் காண்கிறவண்ணமாய்க் காட்டியிருக்கிறது. அதில் 3 வெளித்தோல்; 4, 4 வெளித்தோலுக்கூடே தெ

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

ரியும் நிறப்படலம்; 12 உள்தோலில் வேரூன்றி எழும்பின இரண்டு மயிர்; 13, 14 வியர்வைப்பைகள். இவைகளின் குழல் திருகல்முறுகலாய் உள்தோலுக்கூடாக ஓடி வெளிக்கு வரும்; 5, 5 உள்தோல்; 15, 15 நிணம் அல்லது கொழுப்புக் கசியும் பைகள்; 6, 6 பரிசநரம்புக் கூந்தல்கள். அந்திக்கும் சிறிய தசைமுளைகள்.

௧௧-ம் படம்.



இந்தப் படத்தினாலே தோலானது எவ்வளவு பணிக்கையுள்ள பொருள் என்று கண்டுகொள்ளலாம். இது என்னை மூடுவதற்கான வெறுந் தோற்சட்டையல்ல. இதால் எனக்குப் பிரீதியான அநேக உணர்ச்சிகளைப் பெற்று, எனக்கு நேரிடக்கூடிய அநேக மோசங்களைப்பற்றி எச்சரிக்கப்படுகிறேன். வியர்வை, வெளித்தோல், நிணம் முதலியவைகள் இரத்தத்திலிருந்து பிரிந்து இதால் எப்போதும் கக்கப்படுவதால், இது இரத்தம் சுத்தியாவதற்கும் உதவுகின்றது.

என் வீட்டுத் தட்டுமுட்டுகள்.

இம்மட்டும் நான் சொல்லிவந்த விவரங்களினாலே என் வீடு அவ்வளவு மேன்மையுடையதென்றால், அதற்குள்ளே

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

தருந்த தட்டுமுட்டுகள் அநேகம் இருக்கும் என்றும் நீ எண்ணக்கூடும். அது அப்படிப்பட்டதுதான்; என்றாலும், நானே அல்லாமல் வேறொருவரும் என் வீட்டுக்குள் வரக்கூடாதாகையால், நாற்காலி, மேசை, பாய்முதலியவைகள் வேண்டியதில்லை. ஆனாலும் அறைகளில் வீட்டுக்காரனுடைய வசதிக்கும் சுகத்துக்கும் தேவையான சாமான்கள் வேண்டியமட்டுக்கும் உண்டு. இவைகளில் சிலவற்றைச் சொல்லிக் காண்பிக்கிறேன்.

உ0-ம் படம்.



நடுவிற் பிளந்த மூளையின் வலப்பாதியின் இடப்பக்கத்தோற்றம்.

தாபி அறையுள் மூளை இருக்கிறது என்று மேலே காட்டியிருக்கிறோம். அது குழைவானதும், நரைநிறமுள்ளதும், ஏறக்

குறைய நாலு இருத்தல்நிறைகொண்டதுமான உறுப்பாம். ஐம்பொறிகளுக்கு இடமாய் இருக்கப்பட்ட இந்த மூளையின் கீழ்வளத்திலிருந்து சோடுசோடான நரம்புகள் வலம் இடமாய் கிளைக்கின்றன.

இந்தப் படத்தினால் மூளையின் தன்மை எப்படியென்று அறிந்துகொள்ளலாம். கண் அலகுமுதலிய பகுதிகளுக்குக் கிளைத்துச் செல்லும் நரம்புகள் இதில் தெரிகிறது. பின்கீழ்ப்பகுதியில் சிறுமூளை எனப்படும் பகுதியும், கழுத்து முதுகு நெடுக ஓடுகிற கொடியும் தெரிகிறது. இருபத்தோராம் படத்தைப்பார்த்து, அதில் மூளையும் கொடியும் எப்படி பொருந்தியிருக்கிறதென்பதையும், கொடியில்நின்று நரம்புகள் கைகால்களுக்கு எப்படிச் செல்லுகிறவென்பதையும் கண்டுகொள்ளவும். மூளையானது தலை எலும்புக்குள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறதுபோலவே, கொடியும் முள்ளந்தண்டு என்னும் எலும்புக்கோவையின் பின்பகுதியில் இருக்கிற குழாய்க்குள்ளே பத்திரமாய் அடைந்திருக்கிறது.

௨௧-ம் படம்.



மூளை கொடியினதும், அவைகளில்நின்று கிளைக்கும் நரம்புகளினதும் முன்வளத்தோற்றம்.

நரம்புகள் கவர்கவராய்க் கொடிகொடியாய்ப் பிரிந்து, கிளைமேற் கிளையாய்க் கிளைத்து, கூந்தல் விரிந்து உடம்பெங்கும் செல்லுகிற மாதிரியை ௨௨-ம் படத்தில் கண்டறியலாம். ஊசியினாலே மேனியில் எங்கே குத்தினாலும் நோகிறது. நோ எங்கே காண்கிறதோ அங்கே நரம்பும் இருக்கவேணும். நரம்புகள் எவ்வளவு சிறிதாய் இருந்தாலும், அவைகள் ஒவ்வொன்றிலும் இரண்டுவகையான கூந்தல்கள் இருக்கிறது. ஒன்று அசைவையும், மற்றது உணர்ச்சியை அல்லது சுரணையையும் பிறப்பிக்கும். கைகாலுக்குப் போகும் நரம்புகளில் ஒன்றை அறுத்தால் அந்நரம்பு படரும் பகுதியை வெட்டினால் என்ன, சுட்டால் என்ன? அது உணரமாட்டாததாயும், கொஞ்சமும் அசையமாட்டாததாயும் வரும். உடம்பின் வலப்பக்கத்துக்குச் செல்லும் நரம்புகள் மூளையின் இடப்பக்கத்திலிருந்து கிளம்பும். உடம்

௨௨-ம் படம்.



தேகத்தின் முதுகுவளம். இதில் மூளையும் கொடியும், அவைகளில் நின்று கிளைத்துத் தேகமடங்கலும் படரும் நரம்புகளும் தெரிகிறது.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

பின் இடப்பக்கத்துக்குச் செல்பவைகள் மூளையின் வலப் பக்கத்திலிருந்து கிளம்பும். ஆகையால்தான் கபாலத்தின் வலப்பக்கத்திலே படும் கடுமையான அடியால் இடதுகை யிலும் இடதுகாலிலும் சோர்வு உண்டுபடுவது.

மேல்வீட்டில் உள்ள பண்டம்பாடிகள்.

இப்பகுதியில் என் வீட்டுக்குக் காற்று வீசப்பண்ணும் கரு விகள் இருக்கும். இவைகளாற் சுத்த பரமாணு எப்போதும் என் வீட்டிற் பரம்பும். இவைகளுக்குச் சுவாசப்பையென்று பெயர். இவைகள் இரண்டும் விலாக்களுக்குள்ளே வலப்பக் கத்துக்கு ஒன்றும், இடப்பக்கத்துக்கு ஒன்றுமாய் நெஞ்சை நிரவிக்கிடக்கும்.

என் வீடு அடங்கலும் சுத்த இரத்தத்தை அநேக குழல் வழியாய்ச் செல்லும்படி சாம்பி இறைக்கும் கருவியாகிய இதயம் சுவாசப்பைகள் இரண்டுக்கும் இடையில் நடுநெஞ் சுக்குச் சற்றே இடப்பக்கமாக இருக்கும். இருபத்துமூன் ரும் படத்தை நான் விளங்கச் சொல்லுகையில் அதைக் கவன மாய்ப் பார்க்கவும். அதில் 3, 3 என்ற இலக்கங்கள் வலது சுவாசப்பையையும், 4, 4 இடது சுவாசப்பையையும், 5 இத யத்தையும் குறிக்கும். 15, 15, 15 மேல் அறைக்கும் கீழ் அறைக்கும் இடையிலுள்ள சவ்வுச்சுவர். 12 மூச்சுக்குழல்.

இதயமானது பெரிய மாம்பழ வடிவம் பருமங்கொண்ட நாலு அறையுள்ள தசைத்திரளையாம்; அது எப்போதும் சுருங்கி யும் விரிந்துமிருக்கும். நெஞ்சின் இடதுபக்கத்தில் கையை அணைத்தால் இதயத்துடிப்புக் கைக்குத்தெரியும். ஓடுதல் துள் ளுதலின்பின் இதயத்துடிப்பு மெத்தத் துலாம்பரமாய்த் தெ

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

உ௯-ம் படம்.



நெஞ்சின் முற்பக்கத்தை நீக்கியபின் நெஞ்சக்குள்ளே கிடக்கிறபடி சுவாசப்பைகள்
இதயம் என்ற உறுப்புகளின் முன்வளத்தைக் காட்டும் படம்.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

ரியும். இதயம் இப்படித் துடித்துத் தன் இடப்பக்கத்திலிருந்து செவ்விரத்தத்தைச் செலுத்தும். வீட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் குழல்கள் வழியாய் இதயத்தின் வலப்புறத்துக்குத் திரும்பவரும் இரத்தமோ கறுப்பு நிறமுள்ளது.

இரத்தம் ஏறக்குறைய 3 நிமிஷத்துக்கு ஒருமுறையாய் உடம்பில் சுற்றி ஓடும்; நீ கொஞ்சம் கருத்தாய்க் கேட்பாயானால் உச-ம் படத்தைக்கொண்டு இரத்தச் சுற்றோட்டத்தை உனக்கு விளங்கக்காட்டுவேன். இந்தப் படத்தில் இதயம் வல இடபாதிகளாகப் பிரிந்திருக்கிறதும், அப்பாதிகள் ஒவ்வொன்றும் மேல் கீழ் அறைகளாகப் பிரிந்திருக்கிறதும் தெரிகிறது; 15, 16 என்ற இலக்கங்கள் கறுப்பிரத்தக் குழல்களைக் குறிக்கும்; 12, 13 சிவப்பிரத்தக் குழல்கள்; 6, 6. 14, 14 இந்தக் குழல்கள் இரண்டும் பொருந்துகிற நுண்ணிய இரத்தக்குழல்கள். இவைகள் உடம்பின் எப்பகுதியிலும் ஏராளமாய் இருக்கும்.

இரத்தம் வலப்பக்கத்து மேல்அறையிலிருந்து அந்தப் பக்கத்துக் கீழ்அறைக்குப் போகின்றது. அதிலிருந்து 4, 5 என்றகார் இரத்தக்குழல்கள் வழியாய் மூச்சுப்பைக்குச்சென்று, அங்கிருந்து 7, 8 என்னும் செவ்விரத்தக் குழல்களின் வழியாய் இடதுபக்கத்து மேல்அறையுட்புகுந்து, அதிலிருந்து கீழ் அறைக்குச் சென்று, அப்புறம் அதிலிருந்து 12, 13 என்னும் செவ்விரத்தக் குழல்கள்வழியாய் 14, 14 என்ற நுண்ணிய குழல்களூடே சென்று, அப்பால் 15, 15 என்னும் குழல்கள் வழியாய் இதயத்தின் மேல்அறைக்குத் திரும்பிவந்து, இப்படியே ஒரு சுற்றோட்டத்தை நிறைவேற்றும்.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

௨௪-ம் படம்.



இதயத்தையும், அதிலிருந்தும் அதை நோக்கியும் இரத்தங்கொண்டு செல்லும் குழல்களையும் காட்டும் பாவனை. அம்புகள் இரத்தோட்ட நேரைக் குறிக்கும்.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2Thu, 01 Jan 1976 12:34:56 UTC
All use subject to https://about.jstor.org/terms

இரத்தம் சுற்றி ஓடும்போது எதிர்த்துவராமல் எப்போதும் இரத்தக்குழல்களில் முன்னோக்கிச் செல்லும்படியாக சில அணைகள் போட்டிருக்கின்றன. இவைகள் இரத்தம் ஓடும்படியாகத் திறந்து; அது திரும்பத் துவங்குமானால் உடனே அடைக்கும். இவ்வணைகளுக்குக் கபாடம் என்று பெயர். இவைகள் வண்மையான மெல்லிய சவ்வாலாகும். இதயத்தின் வலப்பக்கத்திலுள்ள அறைகள் இரண்டுக்கும் இடையில் மூன்று கபாடங்களும், இடப்பக்கத்திலுள்ள அறைகள் இரண்டுக்கும் இடையில் இரண்டு கபாடங்களும், கீழ் அறைகள் ஒவ்வொன்றிலுமிருந்து கிளம்புகிற பெரிய குழல்களின் வாயில்களில் மும்மூன்று கபாடங்களும் உண்டு. இவைகளைவிட இதயத்தை நோக்கிக் கார் இரத்தத்தைக் கொண்டுவரும் குழல்கள் நெடுக அவைகளின் உட்பக்கத்தில் சிறு சிறு அணைகள் பல இடைக்கிடையே இருக்கின்றன. இவைகள் இல்லாவிட்டால் காலிலுள்ள இரத்தம் இதயத்துக்கு ஏறமாட்டாது. இக்கபாடங்கள் இரத்தம் ஏறுவதற்கு ஏணியாகும்.

இதுநிற்க: இப்போது மூச்சுப்பையைக்குறித்து உனக்கு அதிக விவரமாய்ச் சொல்லுவேன். மூச்சுப்பையானது நெஞ்சில் எட்டில் ஏழுபங்கவ்வளவு நிரப்பி, முன் கழுத்திலுள்ள மூச்சுக்குழலுடன் இணைந்திருக்கும். இக்குழல் நெஞ்சின் பிற்பகுதியில் இரண்டாகப் பிரிந்து ஒன்று வலது சுவாசப்பைக்கும், மற்றது இடது சுவாசப்பைக்குமாய்ச் சென்று, அவைகளில் மரத்தின் கொப்புகள்போலக் கிளைத்துப் படரும். நாசிவாய் இவைகளால் வாங்கும் மூச்சு இக்குழல்களின் வழியாய்ச் சென்று சுவாசப்பைகளை நிரப்பும்;

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

அங்கே கார் இரத்தம் இப்படி உள்ளுக்கு வாங்கப்பட்ட பரமாணுவின் ஓர் பங்கோடு சேர்ந்து சுத்தமான சிவப்பிரத்தமாய் மாறும். இத்துடன் பரமாணுவின் தன்மையும் மாற அது இனிச் சுவாசத்துக்கு உதவாமல் வெளியே விடப்படும். வீடு அடங்கலும் சுற்றி ஓடும் இரத்தம் சுத்தமாயும் சுகத்துக்கேற்றதாயும் இருக்கும்படிக்கே சுவாசம் நடக்கிறது. ஆராகுதல் கொஞ்சநேரத்துக்குச் சுவாசம் வாங்காமல் இருந்தால் தேகத்திலுள்ள இரத்தம் முழுவதும் படிப்படியாய்க் கறுப்பாகும். கறுப்பிரத்தம் சீவனைத் தாங்கத் தகுந்ததல்ல. அது செவ்விரத்தம் செல்லவேண்டிய குழல்களில் ஒருமுறைதானும் ஓடினுல் அது நஞ்சுபோலாகிச் சடுதி மரணத்துக்கு ஏதுவாகும்.



இதயமும், அதிலிருந்து தேகமடங்கலும் செவ்விரத்தம் செல்வதற்கான குழல்களும்.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

இரத்தமானது என் வீட்டில் அநேக காரியங்களுக்கு முக்கிய துணையாயிருக்கிறது. வீட்டுக் கட்டுக்கோப்புக்குரிய எலும்

௨௯-ம் படம்.



சுவாசப்பைகளும் இதயமும் இருக்கும் மாதிரியையும், இரத்தக் குழல்களும் வாயுக்குழல்களும் சுவாசப்பைகளில் படரும் மாதிரியையும் காட்டும் படம்.

பும் தசை, தோல், நாடிமுதலியவைகளும் எல்லாம் இரத்தத்திலிருந்தே உண்டாகின்றன. ஒரு எலும்பு முறியுமேயானல், அப்போது இரத்தம் அதைச் செவ்வைப்படுத்திப் புதிதாகக்கூடும்படி செய்வதற்கு எலும்புப் பதார்த்தத்தைப் பிறப்பிக்கும்.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

தசையிலே காயம்பட்டால் அதைச் சுகப்படுத்துவதற்குப் புதுத் தசை வளரச்செய்யும். இரத்தத்தின் உதவியினாலேதான் என் வீடு பழுதடையாமல் எப்போதும் நற்சீரில் இருக்கின்றது. இப்படியே எனக்கு அதிக வசதியான வீடொன்று வாடகையின்றிக் கொடுக்கப்பட்டிருப்பதுமன்றி, அது எப்போதும் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பட்டும் வருகிறது.

௨௯-ம் படத்தைப் பார்ப்பதால் இப்போ சொன்னவைகளை இன்னும் திறமாய் விளங்கிக்கொள்ளலாம். அதில் 3 என்ற இலக்கம் மூச்சுக் குழலைக் குறிக்கும். 4, 5 வலது இடது மூச்சுப்பைகளில் பல கவர்களாய்ச் செல்லும் அதின் வலது இடது கிளைகள். 10 சுவாசப்பைக்குக் கார் இரத்தம் செல்லுங்குழல். 13, 15 சுவாசப்பையில் நின்று இதயத்தின் இடதுபக்கத்திலுள்ள மேல் அறைக்குச் செவ்விரத்தம் செல்லும் குழல்கள். 6, 6 மெத்த மெல்லிய சவ்வாலான வாயுக்கண்ணறைகள். இவைகளில் மூச்சுச் சென்று, அவைகளைச் சூழ்ந்திருக்கிற மெல்லிய சவ்வுக்கூடேபோய் இரத்தத்தில் கலந்து அதைச் சுத்தியாக்கும். இரத்தத்தின் அசுத்தமான பங்கு கொஞ்சம் கொஞ்சமாய் மூச்சுவிடுகிறதோடேகூட வெளியில் பறிகிறது.

கீழ்வீட்டிலுள்ள சாமான்கள்.

கீழ்வீடாகிய வயிற்றறையின் மேற்பகுதியிலே நடுவாக இரைப்பை இருக்கிறது. இதற்கு வலப்பக்கமாக விலாக்களுக்குள்ளே ஈரல் கிடக்கிறது. இரைப்பைக்கு இடதுபக்கத்திற் பின்னே இருகையளவு பருமையும் கறுப்பு நிறங்கொண்டதுமான மெத்தையைப்போன்ற உறுப்பாகிய பிளிகை கிடக்கிறது. இது முறைக்காய்ச்சல்காரரில் பருத்து, வயிற்றின் இடப்பக்கத்தில் கட்டிபோற் காட்டும். இரைப்பைக்குக்

கீழே முன்பக்க
மாகக் குடல்கள்
இருக்கின்றன.
இவைகளுக்குப்
பின்னும் கீழு
மாக இடுப்புக்
குள்ளே நாலு
இஞ்சு நீளமும்,
உரப்பும், கருமை
யுமுள்ள திரண்
ட தசையான உ
றுப்புகளாகிய பி
ருக்கங்கள் இர
ண்டும்கிடக்கும்.
இவைகளிலிருந்
து சிறுநீர் துளி
துளியாக இடை
விடாமற் பொ
சிந்து இவ்வறை
யின் கீழ்ப்பகுதி
யில் நடுப்பெற
விருக்கும் வசதி
யான பாத்திரமா
கிய சலப்பைக்
குள்ளே சேரும்.
இரத்தத்தைச் சுத்
தமாக்குகிறதும்,
ஒட்டுகிறதுமான
கருவிகள் மேல்
வீட்டிலே இருக்



சீரண உறுப்புகளையும், அவைகளின் சேர்த்திக்கையையும் காட்டும் படம்.

கிறதென்று கண்டோம். இந்தக் கீழ்வீட்டிலோ உணவைப் போஷண நீராக்கி அதைத் தேகத்திற் சேர்க்கும் உறுப்புகள் உண்டு.

இந்த உறுப்புகள் இன்னும் தெளிவாக விளங்கும்படி, அவைகளை வெளியில் எடுத்து அடுக்காக வைத்திருக்கிற பாவனையாக உஎ-ம் படத்தில் காட்டுகிறேன். 3 என்ற இலக்கம் நாவைக் குறிக்கும். 5 இரைப்பைக்குத் தீன் செல்லுங்குழல். இதற்கு இரைக்குழல் என்று பெயர். இது நடுவிலே துண்டித்திருக்கிறது. 7, 8 சாப்பிடுகிறபோது பேசுகிறபோது உமிழ்நீர் பொசியும் சதையான உறுப்புகள். 9 உள்வளம் தெரியத்தக்கதாகத் திறந்திருக்கிற இரைப்பை. 10, 10 ஈரல். 11 பித்துப்பை. 13, 13 சிறு குடலின் தொடக்கம். 12 பித்துநீர் ஈரலிலிருந்து சிறுகுடலில் இறங்கும்படிக்கான குழல். 15, 15 சிறுகுடல். இதின் நீளம் ஏறக்குறைய பன்னிரண்டுமுழம். 17, 18, 19 பெருங்குடல். இது வலது ஒக்கலையில் தொடங்கி, ஈரல்வரைக்கும் ஏறி, மேல்வயிற்றுக்குக் குறுக்கே சென்று மடங்கி இடதுபக்கமாய் இறங்கியிருக்கின்றது. 20 கடைக்குடல்.

தூபியின் கீழ்வாசலால் உள்ளே செல்லும் சாப்பாட்டிவிருந்து இரத்தம் எப்படி உண்டாகிறதென்பதை உற்றுக்கேள். இவ்வாசலுக்கு அடுக்க உள்ளே பலவகையான சாப்பாட்டை நறுக்கி, நொறுக்கி, அரைக்கத்தக்கப் பல்லென்னும் கத்தி அம்மிகள் இருக்கின்றன. நான் உட்கொள்ளுகிற எவ்வகையான சாப்பாடும் இவைகளாலே அரைக்கப்பட்டு, நல்ல குழம்பாகுவதற்கு அருகிலிருக்கும் ஆறு சிறுப்பைகள் உமிழ்

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

நீரைத் தாராளமாய் ஊற்றிவிடும். குழம்பானபின் நாக்கு அதை அடுக்கத் தொண்டைக்குள்ளே தள்ளிவிடும். தொண்டை இதை அவாவாய் வாங்கி இரைக்குழல்வழியாக மேல் வீட்டுக்கூடே இரைப்பைக்குள் இறக்கிவிடும். இரைப்பை மேலேயிருந்து தனக்குக் கிடைப்பவைகளையெல்லாம் மகிழ்ச்சியோடே ஏற்றுக்கொள்ளும். சாப்பிட்ட பதார்த்தங்களின் தன்மைக்குத்தக்கபடி அவைகள் இரைப்பைக்குள் இரண்டு மணித்தியாலம்முதல் நாலுமணித்தியாலவரைக்கும் கிடக்க, இரைப்பை பிரண்டு உருண்டு அதைப் பிசைந்து தன் உள்வளத்திலிருந்து ஊறுகிற புளிப்பான நீருடன் கலந்துவிடுவதால் அது நரைநிறமான ஒரு பாகுபோல் ஆகும். இது சிறுகுடலுக்குட் புகுந்து, பித்தநீருடனும் வேறு நீர்களுடனும் கலந்து சிறுகுடல் நெளிந்து புரளுவதால் அது நெடுகச் செல்லும். இப்படிச் செல்லுகையில் போஷணையுள்ள பால் நிறமான சாரம் குடலுட் திறக்கிற எண்ணிறந்த நுண்ணிய குழல்களின் வாயில்களால் உறிஞ்சப்பட்டு, முள்ளந்தண்டுக்கு முற்பக்கமாய் நெஞ்சு நெடுக ஏறுகிற குழல் ஒன்றிற் சேர்ந்து, அதைவிட்டு இரத்தத்துடன் கலந்து சுவாசப்பைகளுக்கூடே சென்று செவ்விரத்தமாய் மாறும். சக்கையான பங்கோ பெருங்குடலுக்குள்ளே சென்று மலமாகக் கழியும்.

நான் குடியிருக்கிற வீடு எப்போதும் ஒரே தன்மையுடையதுபோலத் தோற்றினாலும் இடைவிடாமல் மாறிக்கொண்டே வருகின்றது. ஓயாமல் ஊறிக்கொண்டிருக்கிற புது இரத்தத்தினாலே நேரிடுகிற பழுதுகள் நீங்கும்; எவ்வேளை பார்த்தாலும் வெளித்தோல் நகம், மயிர் வளர்ந்துகொண்டே வருவதினாலும், தோலிலே வேர்வை எண்ணெய்க்கசிவு உண்டா

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

கிவருவதினாலும், சிறுநீர் பித்தநீர் உமிழ்நீர் பொசிவதினாலும், மூச்சின் ஈரத்தினாலும் இவைமுதலிய ஏதுக்களினாலும் தேய்ந்து சிதைந்த பகுதிகள் வீட்டைவிட்டுக் கழிகின்றன. நமக்குத் தோன்றாமல் அணுவுக்கு அணுவாய் நடக்கிற இவ்வகையான மாறுதலினாலே உடம்பு ஏறக்குறைய ஏழுவருஷத்துக்கு ஒருமுறை புதிதாகின்றது.

வேலைக்கஸ்தியினால் என் வீட்டுப் பகுதிகள் ஓயாமல் சிதைவடைந்து வந்தாலும், இரத்தத்தின் நயத்தினால் அது பழுதாகித் தேய்ந்து கெட்டுப்போகாமல் நிற்கின்றது. இரத்தம் இவ்வேலைக்கு உவந்த நற்சீரில் இருக்கும்படியாகவே பசியென்ற ஏவலாள் சத்துருவாகத் தோற்றினாலும், மித்துருவாய்த் திறந்தபடி நின்று சாப்பாடு கொண்டா கொண்டா என்கிறது.

என் வீட்டுப் பராமரிப்பு.

நான் குடியிருக்கிற வீடு எப்போதும் சுகமுள்ளதாயிருக்கிறதற்கு அதைச் சில பிரமாணங்களின்படி நான் நடத்திவரவேணும் என்று கேள்வி. இப்பிரமாணங்களை அசட்டைபண்ணிவந்தால், காய்ச்சல், வலி, பெலயீனம்முதலிய சண்டாளர் பலர் புகுந்து, அதிக தொந்தரவு செய்வார்கள் என்று சொல்லுகிறார்கள். காரியம் இப்படியிருக்க, உனக்கும் என்னுடையதைப்போன்ற ஓர் வீடு இருப்பதால் இப்பிரமாணங்களை நீயும் அறிய விரும்புவாய். இவைகள் மெத்த நயம் என்று நான் கண்டிருக்கிறபடியால், நீயும் அவைகளைக் கவனித்து நடப்பது புத்தி.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

பிரமாணங்கள்.

௧. சரியான வேளைகளில் தகுந்ததும் கெட்டியாய்ச் சமைத்ததுமான சாப்பாடு தின்பது அவசியம். ருசிக்குமாத் திரமல்ல, சுகத்துக்கு என்று சாப்பிட்டு, லெகுவாய்ச் சீர ணிக்கமாட்டாத எவ்வகையான உணவுகளையும் தவிர்த்து வரவேணும். மட்டாகவும் ஆறுதலாகவும் சாப்பிடவேண்டும். குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீரே உத்தமம்.

௨. என் வீட்டின் வெளிப்பக்கம் எப்போதும் சுத்தமாயி ருக்கவேண்டும். மேலில் அழுக்கடைவது ஈனமுமல்லாமல், பலமுறையில் வியாதிக்கும் இடமாகிறது. அது மட்டான அனலாய் இருக்கவேண்டும். அதிலே மட்டுக்கு மிஞ்சிய காங்கையாது குளிராவது நெடுநேரம் படுவது கேடு. அன லும் வியர்வையுமுள்ள மேனியில் குளிர் சடுதியாய் நெடு நேரத்துக்குப் படுவதால் அநேகர் வருந்துவார்கள். ஆகையால் அதிகமாய் முழுகுவதையும், பனியிற் திரிவதையும், வியர் வையாலாவது மழையாலாவது சரீரம் நனைந்திருக்கையில் அடிகாற்றில் தங்குவதையும் தவிர். இரண்டொரு வாரத்துக் கொருமுறை கனதண்ணீரில் முழுகுகிறவனிலும், நாள்தோ றும் மட்டாய் முழுகுகிறவன் அதிகுளிரின் பேருகிய சல தோஷம் வாதம்முதலிய வியாதிகளால் வருந்துவதற்கு இட மாவது அரிது.

௩. வெள்ளெனப்படுத்து வெள்ளென எழும்பு என்ற பழ மொழியைக் கவனித்து நட. மிஞ்சிய நித்திரை குறைந்த நித்திரை இரண்டும் ஆகாது. வீட்டு முதலாளியாகிய மூளைக்

கும், காவலாட்களுக்கும், சுமைகாரருக்கும் நித்திரை என்பவளுடைய ஆறுதல் வேண்டும். மற்றும்படி அவைகள் எல்லாம் அலுத்துக் களைத்து நொந்துபோம். கோபம் காமம்முதலிய இச்சைகளால் மூளைக்குச் சேதம் உண்டாகக்கூடியது. எண்ணங்கள் விருப்பங்களைக் காத்து அவைகளைத் தகுந்தவிதமாய் ஒழுங்குப்படுத்துதல் சுகம் பேணுவதற்கு உத்தமமான வழி. இவைகளை ஆளுவதற்கு வீட்டைக் கட்டினவரும், அதையும் அதில் வாசம்பண்ணுகிற ஆத்துமாவையும் காத்துவருபவருமாகிய இயேசுநாதரின் உதவியைத் தேடவேண்டியது.

ச. இரத்தம் சுத்தமாய் இருப்பதற்கு இராப்பகல் சுத்தமான காற்றைச் சுவாசிப்பது அவசியம். நாற்றமான இடங்களுக்கும் குளங்களுக்கும் கிட்ட வாசஞ்செய்யப்படாது. நித்திரை செய்கிற அறையில் காற்று வீசும்படிக்கான சன்னல்கள் வைத்திருக்கவேணும். முகத்தை மூடிக்கொண்டு உறங்குவது நல்ல காற்றைச் சுவாசிக்கிறதற்குத் தடங்கலாகும்.

ரு. மற்ற வீடுகள் அசையாமல் குலுங்காமல் இருக்கவேண்டும். என் வீடோ அதிகமாய் அசையவேண்டியது அவசியம். ஆள் வெளியில் வாடிக்கையாய் ஓடி உலாவி வேலைசெய்து வரவேண்டும். இப்படிப்பட்ட தேகமுயற்சி சற்றுக் கெதியாயும், நாளுக்கு ஒருமுறையாகுதல் வியர்வை கிளம்பத்தக்கதாயும் இருக்கவேண்டும். வேளாண்மை, கம்மியம் முதலான தொழில்களில் ஏற்படாதிருக்கிறவர்கள் நாள்தோறும் காலையில் இரண்டு மூன்றுமைல் தூரம் உலாவிவருகிறது நல்லது. இவ்வித முயற்சியினல் இரத்தம் சரீரத்தின் எப்பகுதிக்கும் மட்டாய்ச் செல்லும். இரத்தோட்டம் முயற்சியின்மையால்

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

மந்தமானல் அது சில உறுப்புகளிற் குறைவாயும், சிலதில் அதிகமாயும் சென்று வியாதிக்குக் காரணமாகும்.

சு. மலசுத்தி ஒழுங்காயிருப்பது சுகத்துக்கு மெத்த அவசியம். சக்கைகளை வீட்டுக்குள் குவிந்து அடைந்து கிடக்கவிடுவது தேகம் முழுவதற்கும் நஷ்டம். இந்தப் பிரமாணத்தைக் கவனியாமல் விட்டால் குன்மம் என்கிற கொள்ளைக்காரன் புகுந்து வீட்டுக்காரனை அதிகம் வருத்துவான்.

வியாதி என்ற பகைஞன் வீட்டுட்புகுந்து கொள்ளையாடத் துணியும்போது, எனது நற்சிநேகனுகிய சுகத்துவம் அவனைத் தைரியமாய் எதிர்த்துநிற்கிறது. வியாதி வீட்டுட் புகுந்துவிட்டால் அவனைப் பிடித்துக் கூடியளவு சுறுக்கிற் புறப்படுத்திவிடும்.

ஆத்மவாசங்களைப்பற்றிப் படித்து அவைகளைப் பேணித் தேற்றுகிறவர்களாகிய வைத்தியர் என்று பெயர்ப்பட்ட சிலர் இருக்கிறார்கள். அவர்கள் செய்யக்கூடியது இச்சிநேகிதனுக்கு உதவிசெய்வதுமாத்திரமே. இச்சிநேகிதனுடைய சொல்லை அவர்கள் எவ்வளவு கவனமாய் அறிந்து கீழ்ப்படிகிறார்களோ, அவ்வளவாய் அவர்கள் நோக்கம் சித்தியாகும். குணங்களைக் கவனித்து, அவைகளில் வியாதி என்ற பகைஞன் பக்கமாய் நிற்கிறவைகள் எவையென்றும், சுகத்துவம் என்ற சிநேகன் பக்கமாய் நிற்பவைகள் எவையென்றும் பகுத்தறிவது இவர்கள் கடமை. உதாரணமாக: கூதல் நடுக்கம் வீட்டுக்காரனுக்காகப் போர்செய்து அவனை அனற்படுத்துவதற்கு, நெருப்பு, சீலை வேண்டுமென்று குரவையிடும். காய்ச்சல் காயுங்காலங்களில் கிளம்பும் தண்ணீர்

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

விடாய் அதின் அகோரத்தைத் தணிப்பதற்குக் குளிர்ந்த தண்ணீர் வேண்டுமென்று எச்சரிக்கிற சிநேகிதனேயாகும். அப்போ தேவையான அளவுதண்ணீர் கொஞ்சம் கொஞ்ச மாய் இடைக்கிடை கொடுக்கவேண்டும். வைத்தியன் குண ங்களை மோசமாய் விளங்கிக்கொண்டு சத்துருவுக்கு உதவி செய்து சிநேகிதனை எதிர்ப்பானேயாகில், வீட்டுக்காரன் மோசமான நோயிலிருந்து மீளுவதற்கான இடம் மெத்தக் குறையும்; என்றாலும் சுகத்துவம் பின்வாங்காமல் உச்சாக மாய் நின்று, வியாதியையும் இப்பெயர்ப்பட்ட வைத்தியனை யும் மேற்கொண்டு, வீட்டை அவர்கள் கையிலிருந்து பல முறையும் தப்புவிப்பான்.

நான் குடியிருக்கிற வீடு அநேக காரியங்களில் மற்றெந்த வீடுகளிலும் மேன்மையுள்ளது. அது கெட்டு நாம் காண்கிற படி அழிந்துபோனபின், அதிக அலங்காரமுள்ள உச்சித மான நித்திய வீடாக புதுக்க உண்டாக்கப்படும். இது காரி யத்தில் அது எல்லாவற்றிலும் அதிமுக்கியமானது. அதிக வல் லமையும் இரக்கமுமுள்ள ஓர் சிநேகிதருடைய அன்பினால் நான் இந்த மேன்மைக்கு நம்பிக் காத்திருக்கிறேன்.

பரம சிற்பாசாரியானவர் இந்த வீட்டில் வசிக்கிறவன் பரி சுத்தமும் சந்தோஷமுமாயிருக்கத்தக்கதாக, இதைச் சுத்தமும் சிறப்பும் பூரணமுமாக உண்டாக்கினார். ஆயினும் அவன் வீட் டை உண்டாக்கினவருடைய தயவை உணராமல், அவரு டைய கட்டளையை மீறிப் பகைஞனாகிய பாவம் புக இடங் கொடுத்தான். இக்கொடிய சண்டாளன் என் வீட்டைக்கொள் ளையாடி அழிக்கும்படி வியாதி, நோ, பட்டினி என்பவர்க

ளைக் கூட்டிக்கொண்டுவந்தான். எல்லாரிலும் கேடாய், மரணம் என்ற கொடிய இராசனை எனக்கு விரோதமாய்த் தூண்டிவிட்டான். இந்தச் சத்துருக்களால் என் வீடு கேடும் தோஷமுமாயிற்று. இவர்களுடைய கையில் அகப்பட்ட என் வீட்டை மீட்டு இரட்சிக்கிறதற்குப் பொன், வெள்ளி, ரத்தினங்களை மலையளவாய்க் குவித்தாலும் விடார்கள். என் உத்தம சிநேகிதன் இல்லாவிட்டால் என் வீடும் நானும் மீட்சியில்லாமல் மோசம்போவோம்.

இதை வாசிக்கிற சிநேகிதனே, நாம் நமது சொந்தக் குற்றத்தினால் நமது வீட்டைப் பாழாக்கினாலும், நம்முடைய பரம பிதா தமது ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த அழிவிலிருந்து அதை மீட்டு நம்மை இரட்சிப்பதற்குக் கொடுத்து இவ்வளவாய் நம்மை நேசித்தார். நாம் தேவனுடைய கட்டளையை மீறினதினால் வரும் தண்டனையை நாம் படவேண்டும்; அல்லது நமக்குப் பதிலாக இன்னொருத்தர் படவேண்டும். இயேசுகிறிஸ்து மனுஷ அவதாரம் எடுத்து, குற்றவாளிகளாகிய நாம் படவேண்டிய பாடுகளைத் தாமே பட்டார். அவர் தேவ கட்டளைக்கு முற்றாகக் கீழமைந்து, நமக்காகப் பூரண நீதியை நிறைவேற்றினார். இயேசுவைத் தங்களுக்கு இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரை நம்புகிற எவர்களுக்கும் இரட்சிப்பு இலவசமாய்க் கிடைக்கும்.

விக்கிரகவணக்கத்தை விட்டு, என் பாவங்களுக்காக உண்மையான மனஸ்தாபமடைந்து இயேசுகிறிஸ்துவை நம்புவேனாகில், என் வீட்டில் அவருடைய காவலின்கீழ் குடியிருப்பேன். அவர் கட்டளையிட, நான் இந்த வீட்டைவிட்டுக்

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

குடியெழும்பவேண்டும். அப்பொழுது இது முழுதும் அழிந்து நாற்றமான குவியலாகும். என்ருலும் அதின் சொந்தக்காரணுகிய இயேசுகிறிஸ்து அதை மறந்துவிடாமல் ஏற்ற சமையத்தில் தமது பிரியப்படி அதை மரண அழிவில்நின்று எடுத்துப் புதுக்க நிறுத்துவார். நான் அவரை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டால், அவரால் மகிமையும் அழியாததுமாக்கப்படும் இந்த வீட்டிலே என்றென்றைக்கும் அதிக சந்தோஷமாய் வாழுவேன் என்று அவர் எனக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிருர்.

மனுஷன் இருப்பதற்கு இவ்வளவு உச்சிதமான வீட்டைத் தேவன் கொடுத்திருப்பது அவருடைய அன்பினுல் அல்லவா? தேவனே இதின் மாதிரியை யோசித்து தமது வல்லமையினுல் இதை உண்டாக்கினுர். ஆகையால் பிரியமானவனே, இதை நினைந்து நன்மைக்கென்றே நமது வீட்டை எப்போதும் வழங்கி, இதைக் கொடுத்ததற்காகவும், நாள்தோறும் இதைக் காத்துவருகிறதற்காகவும் அவருக்கு நமது நன்றியைச் செலுத்துவோமாக. இதற்கு இசையவே ''உங்கள் சரீரங்களைச் சீவனும் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான பலியாக நிறுத்துங்கள்'' என்று உண்மையான வேதம் சொல்லுகிறது.

முற்றுப் பெற்றது.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

உஅ-ம் படம்.



ஆத்மவாச சட்டக்கட்டின் பின்பக்கப் பாவனே.

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

வேதவாக்கியம்.

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.

உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கைபோட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை யெடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்

This content downloaded from 116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்ருய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திரவிநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்ருகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனல், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்.

தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானல் நலமாயிருக்கும்; இரத்தப் பிரியரே, நீங்கள் என்னைவிட்டு அகன்றுபோங்கள். அவர்கள் உம்மைக்குறித்துத் துன்மார்க்கமாய்ப் பேசுகிருர்கள்; உம்முடைய சத்துருக்கள் உமது நாமத்தை வீணய் வழங்குகிருர்கள். கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனே? முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன; அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனையுண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

(ாருக. சங்கீதம்.)

செபம்.

ஆ, பரமபிதாவாகிய கர்த்தாவே! தேவரீருடைய பாத படியிலே பணிகிறேன். நான் உமக்குக் கீழ்ப்படியாத நன்றிகெட்ட துரோகப்பிள்ளையாய் இருக்கிறேன் என்று அறிக்கையிடுகிறேன். என்னைச் சிருஷ்டித்தவரும் காப்பாற்றுகிறவருமாகிய உம்மை மறந்தேன். நான் இந்த மண்ணைச் சிநேகிக்கிறேன். உமது பிரமாணங்களை மீறினேன். உம்மைவிட்டுத் தூரமாய் அகன்று தீயவழிகளில் நடந்துதிரிந்தேன். என் இருதயம் பாவத்தால் கறைப்பட்டிருக்கிறது. இரக்கமுள்ள பிதாவே! எண்ணத்தொலையாத என் பாவங்களைத் தாழ்மையாய் அறிக்கையிட்டு உம்மிடத்தில் வர விரும்புகிறேன். தேவனே! உமது குமாரனின்நிமித்தம் பாவியாகிய எனக்கு இரங்கி, என்னை உமது பிள்ளையாக அங்கிகரித்தருளும். நான் நல்வழியில் நடக்க ஏலாதவனாய் இருக்கிறேன். உமது பரிசுத்தஆவி என் உள்ளத்தில் வாசம்பண்ணவும், என் இருதயத்திலுள்ள பாவங்களைச் சுத்திகரித்து என்னை நீதியின் பாதையில் நடத்தவும் கிருபைபுரியும்.

என் சிநேகிதர் யாவரையும் ஆசீர்வதியும். அவர்கள் மெய்யான தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அறியும்படி செய்யும். எனக்கும் என் சிநேகிதருக்கும் வேண்டிய ஆசீர்வாதங்களையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் அநுக்கிரகித்தருளும். ஆமென்.

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

EMORY UNIVERSITY
300000380460

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms

விலைக்கு விற்கப்படும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
தாயும் பிள்ளையும். (இதில் மருத்துவத்தைப்பற்றி அநேகம் காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.)	0	1	6
பெண்கள் கதைகள்	0	0	3
முத்துமாலை	0	0	3
சிங்கங்களின் கதைகள்	0	0	3
பாம்புக்கதை	0	0	3
சித்திரப்படப் புஸ்தகம்	0	0	3
சோதிசாஸ்திரம்	0	1	0
ஆத்மவாச விவரணம்	0	1	0

This content downloaded from
116.73.245.74 on Sat, 16 Oct 2021 03:13:35 UTC
All use subject to https://about.jstor.org/terms